1991 செப்டம்பர் 17]

THIRU G. VISWANATHAN : Mr. Speaker Sir, the question was about the number of Industrial Centres. I did not ask about the sheds.

HON. MR. SPEAKER : Hon'ble Minister said about the 'sheds'.

THIRU G. VISWANATHAN : I only asked about the number of Industrial Centres.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தொழிற்பேட்டையை மட்டும்தான் கேட்டீர்கள். அமைச்சர் அவர்கள் அங்கே உள்ளே அமைகிற ஷெட்டுக்கே பதில் சொல்கிறார் ; இத்தனை அமைக்கப்படும் என்று சொல்கிறார். (குறுக்கீடு). அதாவது நீங்கள் கேட்கிற கேள்விக்கு அதிகப்படியான விடையே அமைகிறது என்பதை அமைச்சருடைய பதிலிலிருந்து தெரிந்துகொள்ளலாம். நீங்கள் எத்தனை தொழிற்பேட்டை என்றுதான் கேட்டீர்கள். அவர்கள் தொழிற்பேட்டைக்கு அடுத்து உள்ளே அமைகிற ஒவ்வொரு ஷெட் வாரி சொல்கிறார்.

HON. THIRU MOHAMED ASIF : Hon'ble Speaker Sir, A separate question may be put, because I do not have the information readily with me to reply.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 46. திருமதி ரமணி நல்லதம்பி. மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

46—

பல்நோக்கு மீன் பதப்படுத்தும் நிறுவனம்.

*54—திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதியில் ஒரு கடலோர கிராமத்தில் மீன் பதப்படுத்துதல், ஆயத்த உணவு தயாரித்தல், கழிவுகளால் உரம் தயாரித்தல், மீன் எண்ணெய் தயாரித்தல் போன்ற பல்நோக்குத் திட்டம் கொண்ட நிறுவனம் ஒன்றை நிறுவும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் 7 கடலோரக் கிராமங்கள் இருக்கின்றன. ஏராளமான மீன்களை கேரளாவுக்குத் தான் கொண்டு செல்கிறார்கள். இது ஃபாரின் எக்ஸ்சேன்ஜ் எர்ன் பண்ணக்கூடிய இன்டஸ்ட்ரி ஆக இருக்கின்ற காரணத்தினாலேயும் என்னுடைய தொகுதி இன்டஸ்ட்ரியலி மோஸ்ட் பேக்வேர்ட் என்று அறிவிக்கப்பட்டும் எந்த தொழிற்சாலையுமே இதுவரை வராத காரணத்தினாலேயும் ஏதாவது மீனவர்களுடைய கூட்டுறவு சங்கங்களின் மூலமாவது முனைப்புடன் செயல்பட்டு ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி அங்குள்ள மீனவப் பெண்களுக்கும் மீனவர்களுக்கும் வாய்ப்பைத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வருடத்திற்கு அவர்கள் 4,240 டன்கள் மீன்களைப் பிடிக்கிறார்கள். ஒரு நாளைக்கு 15 முதல் 18 டன்கள் வரை மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இதில் உயர் ரக மீன்கள் 20 சத விகிதம் மட்டுமே. அதாவது 3-லிருந்து 4 டன்கள் வரை உயர் ரக மீன்கள் அடங்கும். பருவ காலங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் 300 முதல் 400 கிலோ கிராம் வரை உடனுக்குடன் மீன்கள் விற்கப்படுகின்றன. பிடிக்கப்படும் மீன்கள் பொதுவாக தேக்கம் அடைவது இல்லை. அப்படித் தேக்கம் அடைந்தாலும் அருகிலுள்ள நகரங்களுக்கு பனிக்கட்டி இடப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றது. பனிப் பொறி நிலையம் இடிந்தகரை பெரிய சாலையில் ஏற்கனவே உள்ளது. தற்போது அது மூடப்பட்டுள்ளது. ஏனென்றால் எதிர்பார்த்த அளவு பனிக்கட்டி விற்பனை சரி இல்லாததால் மூடப்பட்டுள்ளது. மேலும் தரமான மீன்கள் அங்கு நிறைய கிடைப்பதில்லை. மேலும் இது ஒரு வறட்சியான பகுதியாகும். எனவே மீன் பக்குவம் செய்ய போதிய தண்ணீர் கிடைப்பதில்லை. மேலும் சீரான மூன்று வழித் தொடர் அதாவது 'த்ரிஃபேஸ் லைன்' மின்சார விநியோகம் இல்லை. அதனால் தொழிற்சாலை அமைக்கக்கூடிய சாத்தியக்கூறும் இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலிருந்து ஏராளமான இறால் மீன்களை வெளியே கொண்டு செல்கிறார்கள். ஏற்றுமதியே ஆகின்றது. ஆகவே அவைகளை நாமே ஒரு தொழிற்கூடம் மூலமாக எப்படிப் பதப்படுத்தி, பக்குவப்படுத்தி ஆயத்த உணவாக ஆக்க முடியுமோ அப்படியெல்லாம் செய்வோமானால் 'ஃபாரீன் எக்ஸ் சேன்ஜ்' தமிழகத்துக்கு வருமே. இதை ஏன் கேரளாக்காரர்கள்

1991 செப்டம்பர் 17]

அடித்துச் செல்லவேண்டுமென்று கேட்டு, அதற்கான முனைப்புடன் செயல்பட வேண்டுமென்று கேட்டு, இந்த ஐஸ் பிளான்ட்—கேரள மீன் விற்பனையாளர்கள் மீன்களை எல்லாம் எடுத்துச் சென்றுவிடுவதால் தான்—அது பங்ஷன் ஆகாமல் இருக்கிறது; அதனாலேயும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டு இனிமேலாவது இதைப் பரிசீலனை செய்து இப்படி ஒரு தொழிற்சாலை உண்டுபண்ணுவதன் மூலமாக வறட்சிக்கு இலக்காகி இருக்கின்ற, இன்டஸ்ட்ரியலி மோஸ்ட் பேக்வேர்டு என்று அறிவிக்கப்பட்டு இருக்கின்ற தொகுதிக்கு ஒரு ஒளி மயமான எதிர்க்காலம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு ; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதை குறிக்கும்].

2. தகவல் கோரல்.

தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் எடையூர் கிராமத்தில் இடி, மின்னலால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அரசின் கவனத்திற்கு மிக இன்றியமையாத ஒரு அவசரப் பிரச்சினையைக் கொண்டுவர வேண்டுமென்று திரு. பழனிசாமி என்னிடம் அனுமதி கோரி இருக்கிறார். நான் அனுமதி வழங்கி இருக்கிறேன். திரு. பழனிச்சாமி.

முற்பகல் 10-00

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14 ஆம் தேதி தஞ்சை மாவட்டத்தில், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் எடையூர் என்ற உள்கிராமத்தில் கடுமையான மழை பெய்து இடி இடித்ததன் காரணமாக விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்த விவசாயத் தொழிலாளர்கள் மூன்று பேர்கள் அந்த இடர்பாட்டில் பாதிக்கப்பட்டு ஒருவர் ஸ்தலத்திலேயே இறந்து போய் விட்டார். இரண்டு பேர்களுடைய உயிர் ஊசலாடுகிற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இன்றுவரையில் அவர்கள் பிழைப்பார்களா என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. தனது கணவனுக்கு உணவு எடுத்துச்சென்ற கலைச்செல்வி என்ற பெண்ணும் இந்த இடர்பாட்டில் பாதிப்புக்